**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 194/2010**

**PROSECUTION WITNESS NO. 4**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : மரியசூசை | **Caste** | : |
| **Father's/Husband Name** | : பரிசுத்தம் | **Religion** | : கிறிஸ்தவர் |
| **Village** | : **126,** பொன்னுசாமி நகர், நாகை பைபாஸ் ரோடு | **Calling** | : வியாபாரம் |
| **Taluk** | : தஞ்சாவூர் | **Age** | : **65/2023** |

**(Accused 1 died. A2, A3, A4 absent. Petition U/s. 317(1) CrPC filed and allowed.)**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.06.2023**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி எஸ். ஜெயந்தி, பெஞ்ச் கிளார்க் கிரேடு 3, திருமதி. எம். உதயராணி, தட்டச்சர்**

**<u>C.C.No. 194/2010 26.06.2023</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 11.25**

## முதல் விசாரணை:

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து முட்டை வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 ஜெயேஸ் குமார் என்பவரை எனக்கு தெரியாது. 1 ஆம் எதிரி துளசி தாசன் என்பவரை பார்த்துள்ளேன். கடந்த 2003 ஆம் ஆண்டிலிருந்து நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். துளசிதாசன் என்பவர் என் வீட்டிற்கு பக்கத்து வீட்டில் மருத்துவமனை ஆரம்பிப்பதற்காக 2003 ஆம் ஆண்டு பொன்னுசாமி நகருக்கு வந்தார். அந்த வீடு திருச்சி BHEL லில் பணிபுரியும் பன்னீர் செல்வம் என்பவருக்கு சொந்தமான வீடு ஆகும். மேற்படி வீட்டில் சித்தவைத்தியசாலை துவக்கப்பட்டது. 2-3 மாதங்கள் தான் இயங்கியது. மாணவர்கள் சரியாக சேராததால் அதில் போலீஸ் வழக்கு போடப்பட்டு மூடப்பட்டது. என்ன வழக்கு போடப்பட்டது என்று எனக்கு தெரியாது. வீட்டின் உரிமையாளர் பன்னீர்செல்வம் தற்போது உயிருடன் இல்லை. அந்த வீட்டில் தற்போது உத்திராபதி என்பவர் குடியிருந்து வருகிறார். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

## எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

துளசிதாசன் தற்போது உயிருடன் இருக்கிறாரா என்றால் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். வழக்கின் எதிரிகள் 2,3,4 ஆகியோரை எனக்கு தெரியாது. சித்தவைத்தியசாலை எதற்காக மூடினார்கள் என்றால் அது குறித்து எனக்கு

**C.C.No. 194/2010    26.06.2023**

தெரியாது. துளசிதாசன் எனக்கு நேரடி பழக்கம் கிடையாது. துளசிதாசன் தான் வைத்தியசாலையை தொடங்கினார் என்பதை எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் அவர் தான் வந்து சென்றுக் கொண்டிருந்தார். துளசிதாசன் எனது பக்கத்து வீட்டில் குடியிருந்ததற்கான வாடகை ஒப்பந்தம் எதுவும் நான் பார்க்கவில்லை. மேற்படி மருத்துவமனையின் பெயர் என்ன என்றால் மருத்துவமனைக்கு பெயர் பலகை எதுவும் வைக்கவில்லை. எனக்கு வழக்கின் விபரங்கள் தெரியாது என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.